**BY RPAD**

R.No.7307/E4/2013/S3

Office of the Director of Public Health
and Preventive Medicine, Chennai-6
Dated: 05.10.2015

Sub: Establishment – Public Health – Tamil Nadu Ministerial Service – Selvi. M.P.Induja D/o (late) Thiru. M.R.Parthasarathy - Appointed as Typist on Compassionate Grounds – Regularisation of Services – Ordered – Copy Communicated – Regarding.

Ref: 1. G.O.(3Ŀ) No.82, Health and Family Welfare (AB-1) Department dated:25.8.2015.

*******

A copy of the Government Order cited inrespect of Selvi. M.P.Induja, Typist of this office is enclosed herewith for taking necessary action.

A.NIRMALA
Joint Director (Administration)i/c

To
S6 Seat of E4 Section of this office.
Copy to:
Selvi.M.P.Induja,Typist of this office
An Original Copy of the Government Order cited intended to his along with the following certificated are enclosed herewith.

1. SSL/HSC Mark lists (2)
2. Typewriting Certificate Tamil (Junior & Senior Grade)
3. Typewriting certificate Englilsh (Junior & Senior Grade)
4. Transfer certificate
5. Community certificate

Copy to
The Chief Water Analyst, Water Analysis Laboratory, King Institute Campus, Guindy, Chennai-32 :- The Service Register of (late) Thiru.M.R.Parthasarathy, Superintendent, Office of the Chief Water Analyst, Water Analysis Laboratory, Chennai (3 volumes) received in this office in connection with appointment to his daughter under employment assistance as Typist on Compassionate grounds is returned herewith and its receipt should be acknowledged atonce to this office.
Spare-1.

//true copy//forwarded//by order//

Superintendent. 7/x/15

7/10/15

## சுருக்கம்

தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணையடிப்படையில் பணிநியமனம் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை – செல்வி. எம்.பி.இந்துஜா, தட்டச்சர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகம் – தட்டச்சர் பணி நியமனம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி–1) துறை**

அரசாணை (3ப) எண்.82

நாள்: 25/08/2015
திருவள்ளுவர் ஆண்டு, 2046
மன்மத ஆவணி – 08

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள்.03.08.1977
2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித ந.க.எண்.7307/ப.தொ.4/2013/இரு.3, நாள் 28.04.2014.
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண். 5798/சி.டி.அ2/2014, நாள் 15.06.2015.

••••••••

ஆணை:–

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையில் கிண்டி, தலைமை நீர் பகுப்பாய்வாளர் அலுவலகத்தில் திரு எம்.ஆர்.பார்த்தசாரதி (அமரர்) கண்காணிப்பாளராக பணிபுரியும் போது 08.07.2010 அன்று காலமானார். மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் மறைந்த அரசு ஊழியரின் மகள் செல்வி. எம்.பி.இந்துஜா, என்பவர் பூர்த்தி செய்ததன் பேரில் கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் 18.09.2013 முற்பகல் முதல் பணியில் இணைந்தார் என்று கூறியுள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர், தனியர் வகிக்கும் தற்காலிக தட்டச்சர் பதவியில் அவருடைய பணியினை 18.09.2013 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடுமாறு இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசிடம் வேண்டியுள்ளார்.

2. 1954 ஆம் வருடத்திய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 16(பி)–ன் பிற்பகுதியின்படி தனியரது கருணையடிப்படையிலான பணியை தட்டச்சர் பதவியில் 18.09.2013 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தலாம் என்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தனது இசைவினைத் தெரிவித்துள்ளது.

(தபிபா)

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவின்படி, தனியரின் அனைத்து ஆவணங்களும் ஆய்வு செய்யப்பட்டபின், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரின் கோரிக்கையை ஏற்று, கருணையடிப்படையில் தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி. எம்.பி.இந்துஜா, அவர்களின் பணியினை, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் பணியில் சேர்ந்த நாளான 18.09.2013 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்கவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறைப்படுத்தலாம் என்று முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண் 19291/Q1/2015–1, நாள் 14.08.2015 ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை – 600 006.

தனியர், (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மூலமாக.)
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 003.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
நகல்:
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–600 009
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
27/8/15